தமிழ்நாடு வரைவாளர்கள் சங்கம் தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களில் ஒன்றாகும். அரசு ஆணை எண்.G.O.Ms No.1522 Public (Election) Department dated.23.06.1945-ன் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (Abstract of the G.O)

தமிழ்நாடு வரைவாளர்கள் சங்கம் கீழ்க்கண்டவாறு கட்டமைக்கப்பட்டுள்ளது

மத்தியசங்கம் மற்றும் 15 கிளைச் சங்கங்கள் உள்ளன மத்தியசங்கம் சென்னையை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது. மத்தியசங்க நிர்வாகிகள் பின்வருமாறு.

1. மாநில தலைவர்
2. மாநில உபதலைவர் -1
3. மாநில உபதலைவர் -2
4. மாநில உபதலைவர் -3
5. பொது செயலாளர்
6. மாநில பொருளாளர்
7. அமைப்புச் செயலாளர்
8. மண்டல செயலாளர் (கிழக்கு)
9. மண்டல செயலாளர் (மேற்கு)
10. மண்டல செயலாளர் (வடக்கு)
11. மண்டல செயலாளர் (தெற்கு)
12. தலைமையிடத்து செயலாளர்
13. வெளியீட்டு செயலாளர்
14. மாநில தணிக்கையாளர்
15. பொருளாளர் (குடும்ப நலத்திட்டம் &விபத்து காப்புநிதி திட்டம்)

தமிழ்நாடு வரைவாளர்கள் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 15 கிளைச் சங்கங்கள் கீழ்கண்டவாறு செயல்பட்டு வருகின்றன.

1. சென்னை கிளை, சென்னை சேப்பாக்கத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது.
2. காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்ட கிளை காஞ்சிபுரத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது.
3. வேலூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் கிளை வேலூரை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது.
4. கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட கிளை விழுப்புரத்தை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகிறது.
5. திருச்சி, கரூர், புதுக்கோட்டை, அரியலூர் மாவட்ட கிளையானது திருச்சியை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

6. சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கிளையானது சேலத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது.
7. கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்ட கிளையானது கோயம்புத்தூரை தலைமையிடமாக கொண்ட செயல்படுகிறது.
8. பொள்ளாச்சி கிளையானது பொள்ளாச்சியை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது.
9. மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்ட கிளையானது மதுரையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது
10. ஈரோடு மாவட்ட கிளையானது ஈரோட்டை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது.
11. தஞ்சாவூர், நாகபட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறைமாவட்ட கிளையானது தஞ்சாவூரை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது.
12. சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட கிளையானது சிவகங்கையை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது.
13. விருதுநகர் மாவட்ட கிளையானது விருதுநகரை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது.
14. திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்ட கிளையானது திருநெல்வேலியை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது.
15. கன்னியாகுமரி மற்றும் நாகர் கோயில் மாவட்ட கிளையானது நாகர் கோயிலை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

மேற்கண்ட ஒவ்வொரு கிளைச்சங்கமும் கீழ்க்கண்டவாறு நிர்வாகிகளை கொண்டு செயல்பட்டு வருகிறது.

1. தலைவர்
2. உபதலைவர்
3. செயலாளர்
4. இணைச் செயலாளர்
5. பொருளாளர்
6. மத்திய செயற்குழு உறுப்பினர்
7. தணிக்கையாளர்

சென்னை மற்றும் மதுரை போன்ற கிளைச்சங்கத்தில் இரண்டு மத்திய செயற்குழு உறுப்பினர்களை கொண்டு செயல்பட்டு வருகிறது.

மேற்கண்ட 15 கிளைச்சங்கங்களை திறம்பட நிர்வாகம் செய்வதற்கு 1) கிழக்கு மண்டலம், 2) மேற்கு மண்டலம் 3) வடக்கு மண்டலம் மற்றும் 4) தெற்கு மண்டலம் என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு மண்டல செயலாளர்கள் மூலம் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது.

1. கிழக்கு மண்டலம் இந்த மண்டலத்தில் திருச்சி, கரூர், புதுக்கோட்டை, அரியலூர், தஞ்சாவூர், நாகபட்டிணம், திருவாரூர்,மயிலாடுதுறை,சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்கள் மண்டலச் செயலாளர் (கிழக்கு) அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.
2. மேற்கு மண்டலம் இந்த மண்டலத்தில் சேலம், நாமக்கல், தர்மபுரி,கிருஷ்ணகிரி,கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, பொள்ளாச்சி,ஈரோடு மாவட்டங்கள் மண்டலச் செயலாளர் (மேற்கு) அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.
3. வடக்கு மண்டலம் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, வேலூர், திருவண்ணாமலை,கள்ளக்குறிச்சி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கடலூர், விழுப்புரம் மாவட்டங்கள் மண்டலச் செயலாளர் (வடக்கு) அவர்களால் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது.
4. தெற்கு மண்டலம் மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி,கன்னியாகுமரி, நாகர்கோயில் மாவட்டங்கள் மண்டலச் செயலாளர் (தெற்கு) அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

கிளைச்சங்க நிர்வாகிகள் ஒவ்வொரு ஆண்டும் கிளைச்சங்கத்தின் பொதுக்குழு கூட்டப்பட்டு கிளைச்சங்க உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுகின்றனர். கிளைச்சங்க கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும்.

மத்திய சங்க நிர்வாகிகள் இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை மத்திய செயற்குழு கூட்டத்தில் கிளைச்சங்க செயலாளர் மற்றும் மத்திய செயற்குழு உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுகின்றனர். மத்திய சங்க நிர்வாகிகள் கூட்டம் மூன்று மாதத்திற்கு ஒருமுறையும் மத்திய செயற்குழு கூட்டம் வருடத்திற்கு ஒருமுறையும் நடைபெறும். மத்திய செயற்குழுதான் உச்சபட்ச அதிகாரம் படைத்ததாகும். மத்திய செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளே இறுதியானது.

The Draughting officials are the Competent authority for Estimate Data and contract management".

பொறியியல் துறையில் வரைவாளர்களின் பணியானது தனித்தன்மை வாய்ந்த சிறப்பு பணியாகும். எனவே "The Draughting officials are the backbone of the Department என்று அழைக்கப்படுவார்கள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த வரைவாளர்களின் குறைகளை கிளைச்சங்கம் மூலம் மத்திய சங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டு மத்தியச்சங்கம் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக ஒவ்வொரு ஆண்டும் வரைவாளர்களின் பதவி உயர்வு பட்டியலை தொய்வின்றி ஒப்புதல் பெற்று பதவி உயர்வுகளை இச்சங்கம் சீரிய முறையில் செய்து வருகிறது.

மேலும் கிளைச்சங்கம் வாயிலாக கூட்டம் நடத்தப்பட்டு அதில் நடப்பு கால அரசாணைகளை தெரிவித்து அதன் விபரம் குறித்து உறுப்பினர்களிடையே கலந்துரையாடப்பட்டு வருகிறது. இதனால் உறுப்பினர்களின் அறிவுத்திறன் கூட்டப்படுகிறது. இதனால் துறை செம்மையாக செயல்பட்டு வருகிறது.

இது தவிர தமிழக அரசால் நிர்ணயம் செய்யப்படும் ஊதியக்குழுவிற்கு வரைவாளர்களின் பணித்தன்மையை சிறப்பாக தொகுத்து விரிவான அறிக்கையை தயாரித்து அரசுக்கு சமர்ப்பிப்பதோடு அல்லாமல் ஊதியக்குழுவால் பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்படும்போது, ஊதியக்குழுவில் வரைவாளர்களின் பணித்தன்மையை சிறப்பாக எடுத்துரைத்து அனைத்து நிலை வரைவாளர்களுக்கும் சிறப்பான ஊதியத்தையும் மத்திய சங்கம் பெற்றுத் தந்துள்ளது.

வரைவாளர்கள் திறம்பட பணியாற்றும் வகையில் துறையின் சட்ட திட்டங்கள் மற்றும் அரசு ஆணைகள் மற்றும் துறையின் விதிகளை தொகுத்து "Technical Officer's Guide"

| | | |
|---|---|---|
| Ist Edition | - | 1979- லும் |
| IInd Edition | - | 1981- லும் |
| IIIrd Edition | - | 1983- லும் |
| IVth Edition | - | 1985- லும் |
| Vth Edition | - | 1991- லும் |
| VIth Edition | - | 2004- லும் |

ஏழாவது பதிப்பு 2018ம் ஆண்டில் Guide Revision Committee அமைத்து தயாரிக்கப்பட்டது அதில் திரு.எஸ்.பவுன்ராஜன், அன்றைய மாநில தலைவர், உறுப்பினர்களாக திரு.பெருமாள்பிள்ளை பொதுச்செயலாளர், திரு.எஸ்.கே.கலைச்செல்வன், அமைப்பு செயலாளர், திரு.எஸ்.காஜா உசேன், முதுநிலை வரைதொழில் அலுவலர் திரு.மு.திருமலைசாமி, முதுநிலை வரைதொழில் அலுவலர், திரு.எஸ்.ஜீவன்காந்தி, இளநிலை வரைதொழில் அலுவலர் ஆகியோர்களால் சிறப்பாக "Technical Officer's Guide"(தொழில்நுட்ப அலுவலர் கையேடு) தயார் செய்யப்பட்டது. இதனை உடன் இருந்து திரு.என்.சீனிவாசன், சிறப்புநிலை வரைதொழில் அலுவலர் பணி நிறைவுஅவர்கள் ஒத்துழைப்புடன் தயாரித்து வழங்கப்பட்டது.

இப்புத்தகத்தை மூத்த உறுப்பினர் திரு.எம்.பால்ராஜ், தலைமை வரை தொழில் அலுவலர் பணி நிறைவு அவர்கள் தலைமையில் திரு.கே.பி.சத்தியமூர்த்தி, துணை தலைமை பொறியாளர் திரு.எம்.கல்யாண சுந்தரம் செயற்பொறியாளர் ஆகியோர் முன்னிலையிலும் மற்றும் உறுப்பினர்களின் முன்னிலையிலும் வெளியிடப்பட்டது.

இச்சங்கம் மூலம் மேற்படி ”Technical Officer’s Guide”வெளியிடப்பட்டு வரைவாளர்களின் பணிகளை திறம்பட செய்வதற்கு பேருதவி செய்யப்பட்டள்ளது.

மேற்கண்ட ”Technical Officer’s Guide”துறையின் அர்த்தசாஸ்த்திரம் என பல்வேறு தரப்பினரால் பாராட்டு பெறப்பட்டுள்ளது.

மேலும் வரைவாளர்களுக்கான தொழில்நுட்பமலர் 6 மாதங்களுக்கு ஒருமுறை தயாரித்து வெளியிடப்பட்டு வருகிறது.அதில் நடப்பு கால அரசாணைகள், பதவி உயர்வு குறித்த ஆணைகள் அரசுக்கு தமிழ்நாடு வரைவாளர்கள் சங்கத்தால் கோரப்படும் கோரிக்கைகள் விபரம் மற்றும் புதிதாக தேவைப்படும் அரசாணைகள் குறித்து அரசுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் நகல் ஆகிய விபரங்கள் வெளியிடப்பட்டு வருகிறது.

இதனால் புதிதாக அரசால் வெளிடப்பட்ட அரசு ஆணைகளின் விபரங்களை உடனுக்குடன் தெரிந்து கொண்டு அலுவலகங்களை செம்மையாக செயல்பட உதவியாக உள்ளது.

**G. சிவராமன்**
**மாநிலப்பொதுச்செயலாளர்**

**S.K.கலைச்செல்வன்**
**மாநிலத்தலைவர்**